[31st January 1963

திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது தேசிய பாது காப்புக்காக கோயில்களின் நிதியிலிருந்து ஏதாவது நிதி அளிக்கப் பட்டிருக்கிறதா ? அப்படி அளிக்கப்பட்டிருந்தால், எவ்வளவு ? இன்னும் பாதுகாப்பு நிதிக்கு அளிப்பதற்கு ஏதாவது முயற்சிகள் எடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்னிடம் முழு விவரங்கள் இல்லை. தேசிய பாதுகாப்பு நிதிக்கென்று சிற்சில தேவஸ்தானங் கள் ஓரளவு தொகை அளித்திருக்கின்றன. பெரும்பாலும் அவர்கள் தேசிய பாதுகாப்புப் பத்திரங்களில் பணம் போட்டிருக் கிறார்கள். மேலும் உபயோகமில்லாத தங்கத்தை தங்கப் பத்திரங் களிலே போட்டிருக்கிறார்கள்.

திரு. எம். தண்டாயுதபாணி : இப்பொழுது வட்டார விஸ்தரிப்பு வேலைகளுக்கு கிராமப் பங்குத் தொகை 25 சத விகிதம் கொடுக்க வேண்டியிருக்கிறது. பூரா கிராமமும் ஆலயத்திற்கு சொந்தமாக இருக்கின்ற பகுதிகளிலாவது, கோயில் நிதியிலிருந்து 25 சத விகிதம் கொடுப்பதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்டத்தின்படி எந்தெந்த செலவினங்கள் அனுமதிக்கப்படமுடியுமோ அதன்படி அனுமதிக் கப்படும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாமென்று நமது நாட்டிலே ஒரு பழமொழி நிலவி வருகிறது. ஆகவே, இந்த நிதியைப் பயன் படுத்தி எங்கே கோயில்கள் இல்லையோ அங்கெல்லாம் கோயில்கள் கட்டுவதற்கு சர்க்கார் முயற்சி எடுப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புதிதாக கோயில்கள் கட்டு வதற்கு உத்தேசமில்லை. அதற்குச் சட்டமும் இடம் கொடுக்காது என்று நான் நினைக்கிறேன். மேலும், கோயில் இல்லாத ஊரே இல்லை என்று சொல்லலாம்.

அமைச்சர் சுற்றுப்பயணம்

* *30-பி. கேள்வி.—திரு. நா. ப. செங்கோட்டுவேலு :* கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தமிழக அமைச்சர்கள் 1—8—1962 முதல் 14—8—1962 முடிய ஒவ்வொருவரும் பெற்ற பிரயாணப்படி எவ்வளவு ?

(இ) அதன் விபரமடங்கிய பட்டியல் மேஜை மீது வைக்கப் படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A statement [a] is laid on the table of the House.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : இந்தப் பிரயாணப்படி திருச் செங்கோடு இடைத்தேர்தல் நடந்த சமயத்தில் வாங்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

[a] Printed as Appendix I on page 297.

31st January 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சில அமைச்சர்கள் அப்பொழுது சேலத்திற்குப் போயிருந்தார்கள். ஆனால் யாரும் இதற்காகப் பிரயாணப்படி வாங்கவில்லை.

திரு. எஸ். மாதவன் : இது போன்று கனம் அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது அதிகாரிகள் உடன் செல்லுவது முறையா? கனம் திரு. பூவராகன் அவர்கள் வந்திருந்த போது அதிகாரிகள் இருக்கும்போது சில காங்கிரஸ் பேச்சாளர்கள் என்னைத் திட்டிவிட்ட காரணத்தால் இப்பொழுது அதிகாரிகளை சந்திப்பதே கஷ்டமாக இருக்கிறது. ஆகவே அதிகாரிகள் கூட வருவதைத் தவிர்க்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வேலையிருந்தால் அதிகாரிகள் வருகிறார்கள். இது தவிர்க்க முடியாதது. அதிகாரிகள் வருவதினால் கனம் அங்கத்தினர்களுக்கு பாதகம் ஏற்படாது.

திரு. கே. ஏ. மதியழகன் : உப தேர்தல் காலத்தில் மற்ற மாநிலங்களில் நடைமுறையில் அனுசரித்துக் காட்டியதுபோல, நமது அமைச்சர்களும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடாமல் இருப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வேறு எந்த மாநிலத்திலிருந்தும் இந்த மாநில அரசாங்கம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டியதில்லை. எல்லாம் ஒழுங்காகத்தான் நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : தேசிய நெருக்கடி நிலைமையை ஒட்டி கனம் அமைச்சர்களுடைய சுற்றுப்பயணத் திட்டங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குறைக்கப்பட்டிருக்கின்றன என்றே சொல்லலாம்.

திரு. முனு ஆதி : தேசிய நெருக்கடி தீருகிறவரையில், அமைச்சர்களின் சுற்றுப்பிரயாணப் படியை தேசிய பாதுகாப்பு நிதிக்குக் கொடுக்க முன் வந்திருக்கிறார்களா? அப்படியில்லை என்றால் இனி மேலாவது கொடுக்க முன் வருவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பிரயாணப்படி ஏதோ ஊதியம் பெறுகிறமாதிரி இல்லை. செலவு செய்கிற பணம்தான் கொடுக்கப்படுகிறது. பிரயாணத்திற்காக கையைவிட்டு செலவு செய்ய முடியாது.

Loans to Ryots

* 30-*C* Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

The steps taken for the speedy disbursement of loans to the ryots in the Block Development areas?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the table of the House.

[a] Printed as Appendix II on pages 297–298.